# அதிராம்பட்டினம் நகராட்சி

## 2024–2025ம் ஆண்டு
## நிர்வாக அறிக்கை

# நிர்வாக அறிக்கை 2024–2025

## பொருளடக்கம்


| வ.எண் | பிரிவு | பக்க எண்கள் |
|---|---|---|
| 1. | நகர்மன்றம் | 3–7 |
| 2. | நிர்வாக பிரிவு | 8–13 |
| 3. | பொறியியல் பிரிவு | 14–18 |
| 4. | பொது சுகாதாரப் பிரிவு | 19–22 |
| 5. | வருவாய் பிரிவு | 23–25 |
| 6. | நிதி நிர்வாகம் | 26–29 |
| 7. | தணிக்கை | 30–31 |
| 8. | நகரமைப்பு பிரிவு | 32–36 |
| 9. | மின்னணு மேலாண்மை பிரிவு | 37–38 |

அதிராம்பட்டினம் நகராட்சி

# நிர்வாக அறிக்கை 2024–2025

1

# நகர் மன்றம்

# அதிராம்பட்டினம் நகராட்சி
# நிர்வாக அறிக்கை
# 2024–2025

## அமைப்பும் நிர்வாகமும்

அதிராம்பட்டினம் நகரம் தேர்வுநிலை பேரூராட்சி நிலையிலிருந்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசாணை எண்..116 நாள் 17.12.2021–ன் படி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு தற்போது இரண்டாம் நிலை நகராட்சியாக செயல|பட்டு வருகிறது.

## எல்லை

அதிராம்பட்டினம் நகராட்சியின் பரப்பளவு 12.80 ச.கி.மீ ஆகும். அறிக்கையாண்டில் நகர எல்லையில் மாற்றம் இல்லை. நகராட்சியின் வார்டுகள் 27 ஆக இருந்து வருகிறது.

## நகராட்சி எல்லைக்குள் உள்ள வருவாய் கிராமங்கள் பின்வருமாறு

1) அதிராம்பட்டினம்
2) ஏரிப்புறக்கரை

## தோற்றம்

அதிராம்பட்டினம் பேரூராட்சி 12. 07. 1886–ல் உருவாக்கப்பட்டு அரசாணை எண். 1154 நாள். 28. 05. 1954–ன்படி முதல்நிலை தேர்வுநிலை பேரூராட்சியாக அறிவிக்கப்பட்டது. மேலும் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை கடிதம் 5085/ 82 நாள்.25.02.1982–ன் மூலம் தேர்வுநிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.அதிராம்பட்டினம் தேர்வுநிலை பேரூராட்சி நிலையிலிருந்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசாணை எண்..116 நாள் 07.12.2021–ன் படி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுதற்போது இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது.இந்நகராட்சிபட்டுக்கோட்டையிலிருந்து 12 கிலோமீட்டர் தெற்கிலும், முத்துப்பேட்டையிலிருந்து 14 கிலோமீட்டர் மேற்கிலும், மல்லிப்பட்டினத்திலிருந்து 15 கிலோமீட்டர் கிழக்கிலும், வங்காள விரிகுடா கடலிலிருந்து வடக்கு பகுதியில் கடற்கரை அருகில் அமைந்துள்ள பெரிய நகரமாகும். கன்னியாகுமரி முதல் சென்னை வழியாக செல்லும் கிழக்கு கடற்கரை சாலை இந்நகராட்சியின் வழியே அமைந்துள்ளது.

## மக்கட்தொகை

2011 ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியில் உத்தேச மொத்த மக்கட்தொகை 31066 ஆகும் .இதில் ஆண்கள் 14897 நபர்களும் பெண்கள் 16169 நபர்களும் ஆவர்.

# I.நகர்மன்றம்

அதிராம்பட்டினம் நகராட்சியில் சாதாரண உள்ளாட்சித் தேர்தல் – 2022 –ல் வெற்றி பெற்ற 27 வார்டு நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் 02.03.2022–ம் தேதியன்று பதவியேற்றுக் கொண்டனர். மேலும், அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் 04.03.2022–ம் தேதியன்றுநகர்மன்ற தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான மறைமுக தேர்தல் நகர்மன்ற கூட்டரங்கில் நடைபெற்றது. இந்த மறைமுக தேர்தலில் வெற்றிப்பெற்று இந்நகராட்சியின் நகர்மன்ற தலைவராக **திருமதி.**M.M.S.A.**தாஹிராஅம்மாள்,** அவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார். நகர்மன்ற துணைத்தலைவராக 04.03.2022–ம் தேதியன்று நடைபெற்ற மறைமுக தேர்தலில் வெற்றி பெற்று **திரு.**இராம.**குணசேகரன்** அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் 27 நகர்மன்ற உறுப்பினர்கள் விவரம் கீழ்கண்டவாறு.

## அதிராம்பட்டினம் நகராட்சி

### நகர்மன்ற உறுப்பினர்கள்

| வ. எண். | பெயர் திருவாளர்கள் | முதவி |
|---|---|---|
| 1 | எம்.ஏ.எஸ்.எம்.தாஹிரா அம்மாள், க .பெ/ கரீம் அப்துல் | நகர்மன்ற தலைவர் |
| 2 | இராம.குணசேகரன், தஇராமசந்திரன் .பெ/ | நகர்மன்றதுணைத்தலைவர் |
| 3 | ச.திவ்யா, கசக்திவேல் .பெ/ | 1வது வார்டு உறுப்பினர் |
| 4 | அ.சித்தி ஆய்ஷா, கஅஸ்லம் .பெ/ | 2வது வார்டு உறுப்பினர் |
| 5 | ரா.கீர்த்திகா, கராஜா .பெ/ | 3வது வார்டு உறுப்பினர் |
| 6 | மா.அனுசியா, கமாரிமுத்து .பெ/ | 4வது வார்டு உறுப்பினர் |
| 7 | அ.கனீஸ் பாத்திமா, ககாமில் அகமது .பெ/ | 6வது வார்டு உறுப்பினர் |
| 8 | எம்.அய்சா பௌஜீல், கமுகைதீன் .பெ/ | 7வது வார்டு உறுப்பினர் |
| 9 | நூ.அபுதாஹிர், தஅமீன் நூருல் .பெ/ | 8வது வார்டு உறுப்பினர் |
| 10 | அ.அப்துல் ஹலீம், தமுகைதீன் அமீர் .பெ/ | 9வது வார்டு உறுப்பினர் |
| 11 | முஇஸ்மாயில் .நாச்சியா, கசரீப் முகமது .பெ/ | 11வது வார்டு உறுப்பினர் |
| 12 | மு.ராளியா, கசைபுதீன் முஹம்மது .பெ/ | 12வது வார்டு உறுப்பினர் |
| 13 | மு.பெனாசிரா, கஅஜாருதீன் முகமது .பெ/ | 13வது வார்டு உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 14 | சு.இன்பநாதன், தசுப்பிரமணியன் .பெ/ | 14வது வார்டு உறுப்பினர் |
| 15 | ஜெ.பாலமுருகன், தஜெயராமன் .சி .பெ/ | 15வது வார்டு உறுப்பினர் |
| 16 | பி.நான்சி விஜயசுந்தரி, கபிச்சை .அ .பெ/ | 16வது வார்டு உறுப்பினர் |
| 17 | யா.மைதீன் பிச்சை கனி, தஅலி யாக்கூப் .பெ/ | 17வது வார்டு உறுப்பினர் |
| 18 | அஉம்மல் .மர்ஜான், க .ஒய்.எம்.ஏ .பெ/ அன்சர்கான் | 18வது வார்டு உறுப்பினர் |
| 19 | ஹா.தில்நவாஸ் பேகம், கமைதீன் ஹாஜா .பெ/ | 19வது வார்டு உறுப்பினர் |
| 20 | மீ.பகுருதீன், தசாகிப் மீரா .பெ/ | 20வது வார்டு உறுப்பினர் |
| 21 | ஜெ.அகமது மன்சூர், தஜெக்கரியா .எம் .பெ/ | 21வது வார்டு உறுப்பினர் |
| 22 | செ.ஜாஸ்மின், கமுகம்மது செய்யது .பெ/ | 22வது வார்டு உறுப்பினர் |
| 23 | கு.பசூல்கான், தகுல்முகமது .எம் .எஸ் .எஸ் .பெ/ | 23வது வார்டு உறுப்பினர் |
| 24 | அ.அப்துல் மாலிக், தஹாஜா அஹமது .ஏ .பெ/ | 24வது வார்டு உறுப்பினர் |
| 25 | வே.ராக்கப்பன், தவேலு .பெ/ | 25வது வார்டு உறுப்பினர் |
| 26 | சி.வடிவேல், தசின்னையன் .பெ/ | 26வது வார்டு உறுப்பினர் |
| 27 | வீ.சேதுராமன், தவீரகணேசன் .பெ/ | 27வது வார்டு உறுப்பினர் |

# நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நகர்மன்ற கூட்டத்தில் அனுமதி வழங்கிய பொருட்கள் விபரம் 2024–2025

| வ. எண் | கூட்ட விபரம் | மொத்த கூட்டங்கள் எண்ணிக்கை | மொத்த பொருட்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சாதாரணக் கூட்டம் | 9 | 303 |
| 2 | அவசரக் கூட்டம் | 2 | 7 |
| 3 | சிறப்புக் கூட்டம் | 2 | 3 |
| | **மொத்தம்** | **13** | **313** |

மேற்கண்டுள்ளவாறு மன்றக்கூட்டங்களில் அறிக்கையாண்டில் **313** எண்ணிக்கை பொருள்கள் முடிவு செய்யப்பட்டன. ஒத்தி வைக்கப்பட்ட பொருள்கள் இல்லை.

அறிக்கையாண்டில் நியமனக்குழு கூட்டம் எதுவும் நடைபெறவில்லை. வரி மேல்முறையீட்டுக் குழு மற்றும் ஒப்பந்தக்குழு கூட்டங்கள் ஏதும் நடைபெறவில்லை.

| வ. எண் | குழுவின் பெயர் | கூட்டங்கள் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருட்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | நியமனக்குழுக் கூட்டம் | 1 | 1 |
| 2. | ஒப்பந்தக்குழு கூட்டம் | .. | .. |
| 3. | வரி மேல்முறையீட்டுக்குழு கூட்டம் | .. | .. |
| | கூடுதல் | 1 | 1 |

# அதிராம்பட்டினம் நகராட்சி

## நிர்வாக அறிக்கை 2024–2025

**2**

# நிர்வாகப் பிரிவு

# II.நிர்வாகப் பிரிவு

## நகராட்சி அலுவலர்கள்
## ஆணையர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திருமதி. த. சித்ராசோனியா,<br>நகராட்சி ஆணையர் | **01.04.2024** முதல்<br>**07.10.2024** வரை. |
| 2. | திரு. கு. கனிராஜ்<br>நகராட்சி ஆணையர்(பொ) | **09.10.2024** முதல் **06.01.2025** வரை. |
| 3. | திரு. நா. மதன்ராஜ்,<br>நகராட்சி ஆணையர் | **06. 01. 2025** முதல் 26. 02. 2025 |
| 4. | திரு. கு. கனிராஜ்<br>நகராட்சி ஆணையர்(பொ) | **26.02.2025** முதல் **31.03.2025** வரை. |

## நகராட்சி பொறியாளர்

| | | |
|---|---|---|
| 1. | திரு.பி.ஏ.செந்தில்<br>நகராட்சி பொறியாளர் | **01. 04.2024 முதல்** 31.01. 2025<br>**வரை** |
| 2. | திரு. எஸ். கோபிநாத்,<br>நகராட்சி பொறியாளர் | **31. 01. 2025** முதல்**31.03. 2025**<br>வரை |

## நகரமைப்பு அலுவலர்

| | | |
|---|---|---|
| 1. | திரு.ஆர்.விஜயகுமார்(பொ)<br>நகரமைப்பு ஆய்வாளர் | **01.04.2023** முதல் 15.09.2024<br>வரை |
| 2. | திரு. ஆர். கருப்பையன்<br>நகரமைப்பு ஆய்வாளர்(பொ). | **16. 09.2024** முதல் **31.01.2025** வரை |

# துப்புரவுஆய்வாளர்

| | | |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.ஆரோக்கியசாமி<br>துப்புரவு ஆய்வாளர் | **01.04.2024** முதல் 31.03.2025<br>வரை |

# 2024–2025

பொதுப்பிரிவில் அமைச்சுப் பணியில் **1** உதவியாளர், இளநிலை உதவியாளர்கள் **5** நபர்களும் மற்றும் தேவையான இதர பணியாளர்கள் உள்ளனர்.

**காலிப் பணியிட விபரம்**

| வ.எண் | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | தற்போது உள்ள பணியிடம் | காலி பணியிடம் |
|---|---|---|---|---|
| **1.** | மேலாளர் | **1** | **1** | **0** |
| **2.** | கணக்கர் | **1** | **1** | **0** |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | உதவியாளர் | 1 | 1 | 0 |
| 4. | இளநிலை உதவியாளர் | 5 | 5 | 0 |
| 5. | தட்டச்சர் | 1 | 0 | 1 |
| 6. | பதிவறை எழுத்தர் | 1 | 1 | 0 |
| 7. | அலுவலக உதவியாளர் | 3 | 3 | 0 |

**01.04.2024 முதல் 31.03.2025 முடிய உள்ள முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் துயர்துடைப்பு மனுக்கள் பற்றிய விபரம்**

இந்நகராட்சியில் மாண்புமிக தமிழக முதலமைச்சரின் தனிப்பிரிவிலிருந்து இணையதளம் மூலமாக பெறப்படும் மனுக்கள், மாவட்ட ஆட்சியர் துயர்துடைப்பு நாள் மனுக்கள், மாவட்ட ஆட்சியர் விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் மனுக்கள், சுதந்திர போராட்ட தியாகிகள் குறைதீர்ப்பு நாள் மனுக்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலக மனுக்கள் மற்றும் திங்கள்தோறும் நடைபெறும் மாவட்டஆட்சியர் குறைதீர்ப்பு நாளில் பெறப்படும் மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு பதில் மாவட்ட ஆட்சியர் மற்றும் மனுதாரருக்கு பதில் உடனடியாக நிலுவை இல்லாமல் அனுப்பப்படுகிறது. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | பதவியின் பெயர் | 2024–25ம் ஆண்டில் வரப்பெற்ற மனுக்கள் | பதில் அனுப்பப் பட்டவை | நிலுவை |
|---|---|---|---|---|
| 1. | முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள் மற்றும் இணையதளம் வாயிலாக | 96 | 96 | ... |
| 2. | மாவட்ட ஆட்சியர் குறை தீர்ப்பு நாள் மனுக்கள் மற்றும் இணையதளம் வாயிலாக. | 6 | 6 | ... |
| 3. | மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலக மனுக்கள் | 1 | 1 | ... |
| 4. | மாவட்ட ஆட்சியர் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் மனுக்கள் | 1 | 1 | ... |
| 5. | மாவட்ட ஆட்சியர் சுதந்திர போராட்ட தியாகிகள் தொடர்பான கூட்ட மனுக்கள் | ... | ... | ... |

## தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005

தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் கீழ் தகவல்கள் கோரி வரப்பெறும் மனுக்களுக்கு உரிய காலத்திற்குள் மனுதாரர்களுக்கு தகவல் அளித்திடும் பொருட்டு மேலாளர் பொது தகவல் அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேல் முறையீட்டு அலுவலர் நகராட்சி ஆணையர் ஆவார்.

## வழக்குகள் விபரம் 01.04.2024 முதல் 31.03.2025 முடிய

**வழக்கு இனங்கள்**

வழக்குகள்

இந்நகராட்சியில் நிலுவையில் உள்ள வழக்குகளின் விபரங்கள் பின் வருமாறு,

| | | | |
|---|---|---|---|
| 1) | டெல்லி உச்ச நீதி மன்றம் | – | 0 |
| 2) | சென்னை உயர் நீதிமன்றம் | – | 0 |
| 3) | சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை | – | 4 |
| 4) | மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் | – | 24 |
| 5) | மாவட்ட முன்சீப் நீதிமன்றம் | – | 0 |
| | மொத்தம் | – | 28 |

பிரிவு வாரியான வழக்கு விபரம்

1) பணியமைப்பு – 0
2) நகரமைப்பு பிரிவு – 4
3) பொது சுகாதார பிரிவு – 0
4) வரி ,வரியில்லா இனங்கள் – 24

## நிர்வாகம்

அவ்வப்பொழுது பிறப்பிக்கப்படும் அரசாணையின்படி நிர்வாகம் சீராக நடைபெற்று வருகின்றது. ஊழியர்களுக்கு அரசால் வழங்கப்படும் சலுகைகளை உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. சீருடை பெற தகுதியுடைய கடைநிலை ஊழியர்களுக்கும், சுகாதாரப் பிரிவு நகர சுத்தி தொழிலாளர்களுக்கும், இரண்டு செட் சீருடைகளும் வழங்கப்பட்டது.

## அறிக்கையாண்டில் பெறப்பட்ட மனுக்கள் விபரம்

| வ.எண் | மனுக்கள் விபரம் | பெறப்பட்ட எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்டது | நிலுவை |
|---|---|---|---|---|
| 1. | சொத்து வரி பெயர் மாற்றம் | 128 | 128 | 0 |
| 2. | சொத்து வரிவிதிப்பு | 332 | 332 | 0 |
| 3. | கட்டிட அனுமதி | 29 | 29 | 0 |
| 4. | குடிநீர் இணைப்பு | 94 | 94 | 0 |
| 5. | அச்ச அருவருக்கத்தக்க உரிமம் | 85 | 85 | 0 |
| 6. | பிறப்பு, இறப்பு சான்றிதழ் | 422 | 422 | 0 |

## நகராட்சிக்கு வரும் கடிதங்கள் பொது மக்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுத்து முடிவு செய்வதற்கான கால அளவு

| | | |
|---|---|---|
| 1. | சொத்து வரிவிதிப்பு | 30 தினங்கள் |
| 2. | வாடகை மதிப்பு அத்தாட்சி, சொத்து வரி, கேட்பு பதிவேட்டில் வீட்டு வரி நகல், பிறப்பு இறப்பு நகல் வழங்கல் | 7 தினங்கள் |
| 3. | வீட்டிற்கு குடிநீர் இணைப்பு வழங்குதல் | 7 தினங்கள் |
| 4. | கட்டிட அனுமதி விண்ணபத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது | 30 தினங்கள் |
| 5. | அச்ச அருவருப்பு தக்க தொழில்கள் உரிமம் வழங்கல் | 30 தினங்கள் |
| 6. | சொத்து வரி பெயர் மாற்றம் செய்தல் | 10 தினங்கள் |
| 7. | குடிநீர் இணைப்பு பெயர் மாற்றம் கோரும் விண்ணப்பம் | 7 தினங்கள் |

# அதிராம்பட்டினம் நகராட்சி

## நிர்வாக அறிக்கை 2024–2025

## 3

# பொறியியல் பிரிவு

# III.பொறியியல் பிரிவு

இந்நகராட்சியில் **01.04.2023** முதல் **31.3.2024** முடிய பொறியாளர்களும் மற்றும் பொறியியல் பிரிவு பணிக்காக உதவி பொறியாளர் ஒருவரும், மின் பணிக்காக மின்பணி கண்காணிப்பாளர் ஒருவரும் மற்றும் தேவையான இதர பணியாளர்கள் உள்ளனர்.

**காலிப்பணியிட விபரம்**

| வ. எண் | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | தற்போது உள்ள பணியிடம் | காலி பணியிடம் |
|---|---|---|---|---|
| 1. | பொறியாளர் | 1 | 1 | 0 |
| 2. | பொதுபணிமேற்பார்வையாளர் | 1 | 1 | 0 |
| 3. | படவரைவாளர் | 1 | 0 | 1 |
| 4. | பணி ஆய்வர் | 2 | 0 | 2 |
| 5. | மின்பணியாளர் | 1 | 1 | 0 |
| 6. | பிட்டர் | 1 | 1 | 0 |
| 7. | கைபம்பு பராமரிப்பாளர் | 0 | 1 | 0 |
| | **மொத்தம்** | **7** | **5** | **3** |

இப்பிரிவில் அறிக்கை ஆண்டில் இந்நகராட்சி எல்லைக்குள் அமைந்திருக்கும் சாலைகளின் விபரம் பின்வருமாறு.

| **2024–25** | |
|---|---|
| சிமெண்ட் தளம் சாலை | 12.730 கி.மீ |
| தார்தளம் | 35.740 கி.மீ |
| கருங்கல் ஜல்லி | 1.723 கி.மீ |
| மண்சாலை, சரளைதளம் சாலை | 9.294 கி.மீ |
| நகராட்சி சாலை நீளம் | 59.487 கி.மீ |
| நெடுஞ்சாலை நீளம் | 5.755 கி.மீ |

## வண்டி வாகன பராமரிப்பு

இந்நகராட்சியில் அடியிற்கண்ட விபரப்படியான வாகனங்கள், குடிநீர், பொது சுகாதாரம், தெரு விளக்கு மற்றும் அலுவலக பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | ஜீப்புகள் | 3 |
| 2. | குடிநீர் லாரி | 0 |
| 3. | டிப்பர் லாரி | 1 |
| 4. | கழிவு நீர் அகற்றும் வாகனம் | 1 |
| 5. | காம்பக்டர் வாகனம் | 0 |
| 6. | டிராக்டர் | 1 |
| 7. | LCV | 6 |
| 8. | BOV | 9 |
| 9. | HCV | 2 |

## அதிராம்பட்டினம் நகராட்சி
## தெருவிளக்கு பராமரிப்பு விபரம்

நகராட்சி பராமரிப்பில் உள்ள மின் விளக்குகள் விபரம் (27 வார்டுகளுக்கும்)

| மின் விளக்குகளின் விபரம் | 2023–24 | 2024–25 |
|---|---|---|
| குழல் விளக்குகள் | .. | .. |
| சோலார் விளக்குகள் | 40 | 40 |
| சி.எப்.எல். | .. | .. |
| LED | 1969 | 1969 |
| HIGHMAS (உயர்மின் கோபுர விளக்கு) | 8 | 8 |
| **மொத்த விளக்குகள்** | **2017** | **2017** |

2024–2025ம் ஆண்டில் தெருவிளக்கு பராமரிப்பு செலவினம் .. ரூ. 20.85 இலட்சம்

2023–2024ம் ஆண்டில் தெருவிளக்கு பராமரிப்பு தலைப்பின் கீழ் மின்கட்டண செலவினம் .. ரூ. 55.93 இலட்சம்

<u>குடிநீர் விநியோகம் பற்றிய விரிவான விபரங்கள்</u>

அதிராம்பட்டினம் நகராட்சி பரப்பளவு 12.80 சதுர கிலோ மீட்டர் கொண்டுள்ளது. மொத்த வார்டுகள் எண்ணிக்கை 27 ஆகும். 2011ம் ஆண்டு கணக்கின்படி உத்தேச மக்கள் தொகை 31066 ஆகும்.

அதிராம்பட்டினம் நகர பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் பட்டுக்கோட்டைநீரேற்று நிலையம் மற்றும்மிலாரிக்காடு நீரேற்று நிலையம் ஆகிய பகுதிகளில் ஆழ்துளை கிணறுகள் அமைத்து மின் மோட்டார் மூலம் குடிநீர் சேகரிக்கப்பட்டு வருகிறது. மேல்நிலை நீர்தேக்க தொட்டி மூலம் தினமும் 3.32 MLD விநியோகம் செய்யப்படுகிறது. இதன்படி நாள் ஒன்றுக்கு 90 LPCD வழங்கப்படுகிறது.

01.04.2024 முதல் 31.03.2025 முடிய புதிய இணைப்புகள் வீட்டு உபயோக குழாய் இணைப்புகள் 91 எண்ணிக்கையும், வீட்டு உபயோகம் இல்லாத இணைப்புகள் 3 எண்ணிக்கையும் அளிக்கப்பட்டுள்ளது. அதிராம்பட்டினம் நகராட்சி குடிநீர் உபவிதிகளில் குடிநீர் இணைப்பு தொகை மற்றும் குடிநீர் கட்டணம் கீழ்க்கண்டவாறு உயர்வு செய்து வசூலிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | இணைப்பு விபரம் | வைப்புத் தொகை விபரம் | மாதாந்திர கட்டண விபரம் |
|---|---|---|---|
| 1. | வீட்டு இணைப்பு | ரூ.7000 | ரூ.100.00 |
| 2. | வணிக இணைப்பு | ரூ.15000 | ரூ.200.00 |
| 3. | தொழிற்சாலை இணைப்பு | ரூ.15000 | ரூ.200.00 |

2) **மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிகள்**

1) பட்டுக்கோட்டை மெயின்ரோடு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி (10 லட்சம் லிட்டர் **கொள்ளளவு**)
2) மேலத்தெரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி (**5லட்சம் லிட்டர் கொள்ளளவு**)
3) தரகர்தெரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி (2 **லட்சம் லிட்டர் கொள்ளளவு**)
4) மன்னப்பன்குளம் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி/(0.60 **லட்சம் லிட்டர் கொள்ளளவு**)
5) பிள்ளைக்குளம் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி(0.60 **லட்சம் லிட்டர் கொள்ளளவு**)
6) மாரியம்மன் கோவில் தெரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி(1.00 **லட்சம் லிட்டர் கொள்ளளவு**)

இத்திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள குடிநீர் இணைப்புகள் 1000 வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு முடிய 5006 இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் வழங்கப்பட்டுள்ள குடிநீர் இணைப்புகள் 94 ஆகும் . அதில் வீட்டு இணைப்புகள் 91 ஆகும் . வீட்டு உபயோகம் இல்லாத இணைப்புகள் 3 ஆகும்.
குடிநீர் விநியோகம் காலை 6.00 மணி முதல் 8,00 மணி வரையிலும் வழங்கப்பட்டு வருகிறது. நாள் ஒன்றுக்கு 3.32 MLD குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது.வீட்டு இணைப்புகளுக்கு குடிநீர்க்கட்டணம் மாதம் ரூ.100 /- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.வணிக உபயோகமுள்ள இணைப்புகளுக்கு மாதம் ரூ.200/- நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**நீரேற்றும் நிலையங்கள்**

1) பட்டுக்கோட்டை நீரேற்று நிலையம்
2) மிலாரிக்காடு நீரேற்று நிலையம்

**பாதாள சாக்கடை திட்டம்**

பாதாள சாக்கடை திட்டம் இந்நகராட்சியில் ஏதும் இல்லை.

**Bio Mining**

இந்நகராட்சி உரக்கிடங்கில் தேங்கியுள்ள குப்பைகளை பயோ மைனிங் முறையில் பிரிப்பதற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு தற்போது பணி **8567** $M^3$ குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டுள்ளது.

**KNMT**

இந்நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் **24–25–ம்** ஆண்டில் ஒரு **பணி** முடிவுற்றது.

# அதிராம்பட்டினம் நகராட்சி

## நிர்வாக அறிக்கை 2024–2025

**4**

# பொது சுகாதார பிரிவு

# <u>பொது சுகாதாரம்</u>

இந்நகராட்சியின் பொதுசுகாதார பணிகளை செய்து தர 1 துப்புரவு ஆய்வாளர் 4 துப்புரவு மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 களப்பணி உதவியாளர் பணிபுரிந்து வருகின்றனர்.துப்புரவு பணிகளை செய்திட 17 தூய்மைப் பணியாளர்களும் , பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் லாரிகளை பராமரித்து இயக்கிட லாரி ஓட்டுநர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.மேலும் நகரின் முக்கிய வார்டுகளில் துப்புரவு பணிகள் Green Agro Environment தனியார் நிறுவனத்தின் மூலம் விடப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## <u>டெங்கு கொசு தடுப்பு</u>

இந்நகரில் டெங்கு கொசு உற்பத்தியாவதை தடுத்திட பயலொர்சைடு மற்றும் பைரித்திரம் போன்ற மருந்துகளை தினசரி பயன்படுத்தி டெங்கு கொசுக்கள் உற்பத்தியாவது தடுக்கப்படுகிறது.

## <u>பொது மருத்துவம்</u>

இந்நகரில் வாழும் பொது மக்களுக்கு உரிய பொது மருத்துவ சேவைகளை பொது மருத்துவமனை அளித்துவருகிறது. அத்துடன் தனியார் மருத்துவமனைகளும் மருத்துவ சேவை பணிகளை அளித்து வருகிறது.

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை மொத்தம் 208 பிறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் அறிக்கையாண்டில் 214 இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## <u>பணி விபரம்</u>

தினசரி புற நோயாளிகளுக்கு பரிசோதனை செய்து மருந்துகள் வழங்கி ஆலோசனை வழங்கப்படுகிறது. தொற்றா நோய்க்கான **(NCD)** பரிசோதனை மற்றும் அதற்குரிய மருந்துகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கர்ப்பிணி பெண்களை பரிசோதித்தல், குழந்தைகளுக்கும் கர்ப்பிணி பெண்களுக்கும் தடுப்பூசி போடுதல். வீடுகளுக்கு சென்று கணக்கெடுத்தல், பல்ஸ்போலியோ, யானைக்கால் நோய் முகாம் நடத்துதல், மாத்திரைகள் வழங்குதல் டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி திட்டத்தின் கீழ் கர்ப்பிணி பெண்களுக்கு உதவித்தொகை வழங்க ஆவண செய்தல். பள்ளி சிறார் நலவாழ்வு திட்டம் செயல்படுத்துதல் மற்றும் நல திட்டங்கள் செயல்படுத்துதல். தேசிய நகர்புற நல குழுமம் திட்டத்தின் கீழ் குடிசை பகுதிகளில் மாதந்தோறும் மூன்று மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வருகின்றது. மேலும், நோயாளிகளுக்கு **ECG** எடுத்தல், **SCAN** எடுத்தல், ஆய்வகத்தில் Analysier கருவி மூலம் அனைத்து பரிசோதனைகளும் செய்யப்படுகிறது. நாய்கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஊசி போடப்பட்டு வருகிறது.

**<u>கலவை உரம் தயாரிப்பும், விற்பனையும்</u>**

இந்நகரில் உரக்கிடங்கில் குப்பைகள் கொட்டுவது நிறுத்தப்பட்டு தற்பொழுது மக்கும் குப்பைகளைக் கொண்டு கலவை உரம் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்தும் வருவாய் ஈட்டப்பட்டு வருகிறது. நகரில் வார்டுகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பைகள் பிரித்து வாங்கப்படுகிறது. 27 வார்டுகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பைகள் பிரித்து வாங்கப்படுகிறது. வீடு வீடாக குப்பைகள் பெறப்படுகிறது

**<u>திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016.</u>**

உச்சநீதி மன்ற உத்திரவின்படி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வீடு வீடாக சென்று மக்கும் குப்பை, மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து வாங்கிட நகரில் உள்ள 27 வார்டுகளில் அன்றாடம் சேகரமாகும் திடக்கழிவுகளில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளாக தரம் பிரித்து வாங்குவதற்கு ஏதுவாக வீடு வீடாக பச்சை மற்றும் நீல நிற பிளாஸ்டிக் குப்பை தொட்டிகள் வழியாக பொது மக்களிடம் குப்பைகள் வழங்க கூறப்பட்டுள்ளது. பெறப்படும் மக்கும் குப்பைகளை மக்கச் செய்து கலவை உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என பிரித்து வாங்கும் திட்டத்தினை பொதுமக்களுக்கு தெளிவுபடுத்திடும் வகையில், சேவை சங்கங்கள், தொண்டு நிறுவனங்கள' மற்றும் பள்ளி மாணாக்கர்களை கொண்டு பிரச்சார ஊர்வலங்கள் நடத்தப்பட்டு பொது மக்களிடம் சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**<u>ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள்</u>**

நகர்புரத்தில்வாழும் நலிவற்ற மக்களின் அடிப்படை சுகாதார நலனை வாழும் நலிவுற்ற மக்களின் அடிப்படை சுகாதார நலனை வளர்த்திட தமிழக அரசினால் துவக்கப்பட்ட ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டித் தரும் திட்டத்தின் கீழ் இந்நகராட்சியினால் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கீழ்க்கண்ட இடங்களில் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது.

| வ.எண் | ஒருங்கிணைந்தசுகாதார வளாகம் அமைந்துள்ள இடம் |
|---|---|
| 1 | கீழத்தெருசுகாதார வளாகம் |
| 2 | ஹாஜாநகர்சுகாதார வளாகம் |
| 3 | மேலத்தெருசுகாதார வளாகம் |
| 4 | முத்தம்மாள்தெரு சுகாதார வளாகம் |
| 5 | காந்திநகர் சுகாதார வளாகம் |

மேலும் நகரில் உள்ள பொது மக்களின் பொது சுகாதார நலனைக் கருத்திற்கொண்டு பொது கழிப்பிடம்- 1 செயல்பட்டு வருகிறது.

**<u>கொரோனா வைரஸ் நோய் மற்றும் தடுப்பு பணிகள்</u>**

இந்நகராட்சியில்கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கையாக வீடுகள் தோறும் கபசுர குடிநீர் வழங்குதல், நோய் தொற்றுக்குள்ளான பகுதிகள் கட்டுப்படுத்தப்பட்ட பகுதி என அறிவிக்கப்பட்டு, கிருமிநாசினிகள் தெளிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி வாகனம் மூலம் காலை, மாலை என இரண்டு நேரங்களிலும் வீடுகள், அலுவலகங்களில் சோடியம் ஹைபோகுளோரைடு, பிளீச்சிங் பவுடர் போன்ற கிருமிநாசினிகள் தெளிக்கப்பட்டு வருகிறது. களப்பணியாளர்கள் மூலம் வீடுகள் தோறும் சென்று காய்ச்சல் கண்டுள்ளவர்களை கண்டறிதல், Fever Camp நடத்துதல், கொரோனா பரிசோதனை (Swap Test) செய்தல், பாதிக்கப்பட்டவர்களை CCC மையத்திற்கு அனுப்பி சிகிச்சை அளித்தல், வீட்டு தனிமையில் உள்ளவர்களுக்கு தேவையான உணவுப் பொருட்களை தன்னார்வலர்கள் மூலம் விநியோகித்தல், கொரோனா வைரஸ் நோய் தடுப்பு குறித்து விழிப்புணர்வு, நோட்டீஸ் வழங்கப்பட்டு கொரோனா கட்டுப்படுத்தும் பணி அறிக்கையாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**<u>SUC பணிகள்</u>**

இந்நகராட்சியில்திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன்படி நகரில் உள்ள குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள் வரியினங்களுக்கு சேவை கட்டணம் நிர்ணயம் செய்யப்பட் வசூல் செய்யப்பட்டுவருகிறது.

**<u>உரம் தயாரிக்கும்பணி</u>**

அதிராம்பட்டினம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் உருவாகும் கழிவுகளை முறையாக சேகரித்து பிரித்து உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ள கீழ்க்கண்ட வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

1) 6 பேட்டரி வாகனம்
2) 9 டாடா ஏசி வாகனம்
3) 1 டிப்பர் வாகனம்

**<u>பிளாஸ்டிக் பை அபராதம்</u>**

அதிராம்பட்டினம்நகராட்சி பகுதியில் அரசு ஆணையின்படி ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய பிளாஸ்டிக் பயன்பாட்டை ஒழிக்கும் வகையில் பறிமுதல் செய்தும், அரசு உத்தரவின்படி அபராதக் கட்டணம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

**<u>நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம்</u>**

தமிழக அரசின் முதன்மை திட்டமான "நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம்" சார்பாக "என் குப்பை என் பொறுப்பு" என்ற கருத்தை பொதுமக்களுக்கு கொண்டு செல்லும் வகையில் அதிராம்பட்டினம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை – தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்நகராட்சி பகுதியை குப்பையில்லா நகரம் என்கிற நிலையை உருவாக்கும் பொருட்டு பொது மக்கள், பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

# அதிராம்பட்டினம் நகராட்சி

# நிர்வாக அறிக்கை 2024–2025

# 5

# வருவாய் பிரிவு

# V- வருவாய்பிரிவு

**வரி மற்றும் வரியில்லா இனங்கள்**

**(அ) சொத்து வரி**

(அ) நகராட்சியினால் வசூலிக்கப்பட வேண்டிய சொத்து வரி மொத்தம் ரூ.154.97 லட்சமாகும். அறிக்கையாண்டில் வசூலிக்கப்பட்ட சொத்து வரி மொத்தம் ரூ.131.64 லட்சமாகும். இது 94.65 சதவீதமாகும்.நகரில் சொத்து வரி விதிக்கப்பட்ட வரிவிதிப்புகளின் எண்ணிக்கை 8787 ஆகும். வரி வசூல் பணிகள் செய்ய, 1- வருவாய் ஆய்வாளர் மற்றும் 3 வருவாய் உதவியாளர்கள் பணியிடங்கள் உள்ளது.

**(ஆ) வரியில்லா இனங்கள்**

நகராட்சிக்கு சொந்தமான வரியில்லா இனங்கள் போன்றவைகளை ஏலம் விட்டதன்வழியே இந்நகராட்சிக்கு வர வேண்டிய மொத்த 29- குத்தகை இனங்களின் வருவாய் 4.78 /- லட்சமாகும். இதில் அறிக்கையாண்டில் ரூ.4.78 லட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. விபரங்கள் வருமாறு.

| **வ.எண்** | **குத்தகை இனம்** | **2024. 2025 வரவு** |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | புதிய பேருந்து நிலையத்திற்குள் வந்து போகும் பேருந்துகளுக்கான கட்டணம் உரிமம். | 58984 |
| 2 | புதிய பேருந்து நிலைய கட்டணக் கழிப்பிடம் மற்றும் குளியலறை குத்தகை உரிமம். | 171336 |
| 3 | சாலை ஓர அங்காடி | 248063 |
| | **கூடுதல் ரூ.** | 478383 |

**(இ)அறிக்கையாண்டிலும், கடந்த ஆண்டிலும் வசூலிக்கப்பட்ட வரி மற்றும் வரியில்லா இனங்களின் வசூல் சதவீதம் வருமாறு.**

| வருடம் | வரியினம் | வசூல் | | | வசூல் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | கேட்பு | வசூல் | நிலுவை | |
| 2024–2025 | சொத்துவரி | 154.97 | 131.64 | 23.33 | 94.65 |
| | காலிமனை வரி | 12.11 | 10.00 | 2.11 | 70.67 |
| | குடிநீர் கட்டணம் | 73.25 | 67.82 | 5.43 | 93.15 |
| | தொழில் வரி | 11.50 | 9.74 | 1.76 | 86.59 |
| | பயனாளர் கட்டணம் | 22.04 | 21.08 | 0.96 | 96.04 |
| | **வரியில்லா இனங்கள்** | 20.07 | 18.61 | 1.45 | 92.03 |

சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி மற்றும் குத்தகை உரிம இனங்களின் நிலுவை தொகைகளை வசூலித்திட தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 2023ன்படி உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**(ஈ) போக்குவரத்து வசதிகள்**

இந்நகரில் இருந்து மாவட்டத்தின் முக்கிய நகரங்களுக்கும் மாவட்டத்தின் வெளியில் உள்ள முக்கிய நகரங்கள் மற்றும் மாவட்ட தலைநகர்களுக்கும் மற்றும் தலைநகர் சென்னைக்கும் மக்கள் எளிதில் சென்றுவரும் வகையில் பேருந்து வசதிகள் உள்ளன. நகராட்சியின் நவீன மைய பேருந்து நிலையம் போக்குவரத்து துறையினரால் வகுப்பு பேருந்து நிலையமாக தரம் செய்யப்பட்டுள்ளது. அரசின் உள்துறை (போக்குவரத்து-ஐஏ)துறை 04.03.2002ம் தேதியிட்ட உத்திரவுகளின்படி பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கான கட்டணம்வசூலிக்கப்பட்டு வரப்படுகிறது. பேருந்து நிலையத்தில் ஆண்/பெண் கழிவறைகள், சிறுநீர் கழிக்குமிடம், கட்டண கழிப்பிடம் மற்றும் குளியலறையும் கொண்டதாக செயல்பட்டு வருகிறது.

**(உ) சந்தைகள்**

இந்நகராட்சி எல்லைக்குள் சிவன்கோவில் தெரு மற்றும் மார்க்கெட் பகுதியில் தனியாருக்கு சொந்தமான இரண்டு சந்தைகள் செயல்பட்டு வருகிறது.

**(ஊ) ஆடுஅடிக்கும் தொட்டி**

நகராட்சியில் ஆடு அடிக்கும் தொட்டி ஏதும் பராமரிக்கப்படவில்லை. மார்க்கெட் பகுதியில் தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான ஆடு அடிக்கும் தொட்டி இயங்கி வருகிறது.

**(ஒ) மரம் நடுதலும், பராமரித்தலும்.**

அறிக்கையாண்டில் 15000 மரக்கன்றுகள் நடுவதற்கு இலக்கு நிர்ணயம் செய்து தற்போது வரை 1000 மரக்கன்றுகள் நடப்பட்டு தொடர்ந்து பராமரிப்பு செய்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

# அதிராம்பட்டினம் நகராட்சி

## நிர்வாக அறிக்கை 2024–2025

## 6

# நிதி நிர்வாகம்

# VI. புதிய கணக்கு முறை
## (NEW ACCOUNTING SYSTEM)

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு **(EÃ2)** துறையின் **06.01.1999**ம் தேதிய அரசாணை (நிலை) எண்.8–ன்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் புதிய கணக்கு வைப்பு நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டதற்கிணங்க **01.04.1999** முதல் இந்நகராட்சியில் புதிய கணக்கு வைப்பு நடைமுறை அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இப்புதிய கணக்கு முறை அமுல்படுத்தப்பட்டதில் நகராட்சியின் வரவு செலவு பற்றிய விபரங்கள் அந்தந்த மாதம் அறிந்து கொள்ளவும், ஒவ்வொரு ஆண்டும் நகராட்சியின் சொத்துக்கள் மற்றும் கடன்கள் பற்றிய விவரங்கள் எளிதாக அறிந்து கொள்ளும் வகையில் உள்ளது.மேலும் **25.12.2015–**ம் தேதி முதலில் CWBS முறையில் கணக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**வரவினம்**-2024-2025

| வ.எண் | விபரங்கள் | தொகை இலட்சத்தில் | விழுக்காடு |
|---|---|---|---|
| 1 | சொத்து வரி | 65.33 | 9.57 |
| 2 | இதர வரியினங்கள் | 2.19 | 0.32 |
| 3 | ஒதுக்கப்பட்ட வருவாய் | 14.50 | 2.12 |
| 4 | பகிர்மான நிதி | 559.45 | 81.93 |
| 5 | கட்டணங்கள் | 30.42 | 4.45 |
| 6 | மானியம் | 0 | 0 |
| 7 | இதர வரவு விற்பனை மற்றும் வாடகை கட்டணம் | 11.02 | 1.61 |
| | **மொத்தம்** | **682.91** | **100** |

**செலவினம்**-2024-2025

| வ.எண் | விபரங்கள் | தொகை இலட்சத்தில் | விழுக்காடு |
|---|---|---|---|
| 1 | ஊதியம் | 314.19 | 40.23 |
| 2 | ஓய்வூதியம் | 0 | 0 |
| 3 | இயக்க செலவுகள் | 131.06 | 16.78 |
| 4 | பழுது மற்றும் பராமரிப்பு | 316.76 | 40.56 |
| 5 | திட்டச் செலவுகள் | 0.05 | 0 |
| 6 | நிர்வாக செலவுகள் | 2.08 | 0.27 |
| 7 | நிதி செலவுகள் | 21.13 | 2.71 |
| 8 | தேய்மானம் | **-4.22** | 0.55 |
| | **மொத்தம்** | **781.05** | **100** |

**கடன் நிலுவை விபரம்**

| வ. எண் | நிறுவன விபரம் | கடன் எண் | செலுத்த வேண்டிய தொகை | | |
|---|---|---|---|---|---|
| | | | அசல் | வட்டி | கூடுதல் |
| இல்லை | | | | | |

# வங்கி கணக்கு விபரங்கள்

| கணக்கு குறியீடு எண் | நிதி விபரம் | வங்கியின் பெயர் | வங்கி கணக்கு எண் |
|---|---|---|---|
| 4502323 | Revenue Fund | CO-OPERATIVE | 3866 |
| 4502101 | Revenue Fund | CANARA BANK | 1201101038554 |
| 4502102 | Revenue Fund | INDIAN BANK | 6504191817 |
| 4502103 | CGF & Other Scheme Fund | INDIAN BANK SCHEME | 742562614 |
| | Revenue Fund | BOB - RF | 05350100002943 |
| 4502105 | Revenue Fund - 14TH FINANCE | BOB | 05350100015582 |
| 4502122 | Revenue Fund | TREASURY - I | |
| 4502125 | Revenue Fund | TREASURY - II | |
| 4502129 | Revenue Fund | TREASURY - III SJSRY | |
| 4502127 | Revenue Fund | TREASURY - IV | |
| 4502106 | 15TH FINANCE | ICICI | 382001000956 |
| 450214 | NNT- P.C | BOB, TNJ | 05350100020224 |
| 4502114 | NNT- G.C | BOB, TNJ | 05350100020225 |
| | Bio diversity | SBI, Adi | 36117854773 |
| 4502115 | SBM 2.0 | Axis Bank, Pkt, (A/c. Opened as on 25. 01. 22 | 92010022089938 |
| 4502501 | Online Collection | CUB, Thamarankottai | 510909010214636 |
| 4502131 | NNT | IOB | 168101000016347 |
| 4502132 | NNT | IOB | 088801000048412 |
| 4502117 | Deposit (GF) | ICICI | 483705000326 |
| 4502130 | PMSVANIDHI | IB | 7595980568 |
| 4502135 | SBM | ICICI BANK | 483701000167 |
| 4502120 | KNMT (SNA) | SBI | 41740329492 |
| 4502118 | NSMT (SNA) | SBI | 42225996081 |
| 4506101 | SFC GRANT | IB | 7580933057 |
| | NULM | IB | 7710105972 |
| 4502119 | CMBFS | IB | 7600187543 |
| 4502111 | Water Supply | CANARA BANK | 1201101050429 |
| | PF | Treasury PFD(TP) | - |
| | PF | Treasury PFD(Muni) | PD202309646707 |
| 4502111 | Elementary Section | CANARA BANK | 110198491460 |
| 4502104 | Revenue Fund | INDIAN BANK | 6806910466 |
| 4502107 | Revenue Fund | INDIAN BANK | 7221383683 |
| 4502110 | Revenue Fund | INDIAN BANK | 7221383106 |
| 4502109 | Revenue Fund | INDIAN BANK | 7221382396 |
| 4502108 | Revenue Fund | INDIAN BANK | 7221383060 |
| 4502113 | Revenue Fund | INDIAN BANK | 7221383763 |
| 4502112 | Revenue Fund | INDIAN BANK | 7221383582 |

# அதிராம்பட்டினம் நகராட்சி

# நிர்வாக அறிக்கை 2024–2025

7

# தணிக்கை

# VII– தணிக்கை

**நிலுவை தணிக்கை பத்திகள்**

31.03.2025–ம் தேதியன்று இந்நகராட்சியில் நிலுவையில் உள்ள தணிக்கை தடை பத்திகள் பின்வருமாறு

| வ.எண் | விபரம் | சாதாரண பத்திகள் | சிறப்பு பத்திகள் | கூடுதல் |
|---|---|---|---|---|
| 1. | ஆரம்ப இருப்பு | 322 | 229 | 551 |
| 2. | அறிக்கை ஆண்டில் பெறப்பட்டது | .. | .. | .. |
| 3. | நிவர்த்தி செய்யப்பட்டது | 118 | 65 | 175 |
| 4. | நிலுவை | 212 | 164 | 376 |

**மாநில முதன்மை கணக்காயர் அலுவலக நிலுவை பத்திகள் (A.G. AUDIT)**

| வ.எண் | விபரம் | நிலுவை பத்திகள் |
|---|---|---|
| 1. | ஆரம்ப இருப்பு | 12 |
| 2. | அறிக்கை ஆண்டில் பெறப்பட்டது | .. |
| 4. | நிவர்த்தி செய்யப்பட்டது | .. |
| 5. | நிலுவை | 12 |

# அதிராம்பட்டினம் நகராட்சி

## நிர்வாக அறிக்கை 2024–25

**8**

# நகரமைப்பு பிரிவு

## VIII.நகரமைப்பு பிரிவு

இந்நகராட்சியில் நகரமைப்பு பிரிவு பணிக்காக 1 நகரமைப்பு ஆய்வாளர் மட்டும் உள்ளனர்.

### அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்கள்

இந்நகராட்சியில் 01.04.2024 முதல் 31.03.2025 முடிய வரை அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அறிவிப்புகள் கொடுத்து தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### இயந்திர நிறுவன அனுமதி

31.03.2024 வரை இயந்திர அனுமதி வழங்க வேண்டியது ஏதும் இல்லை. நடப்பு ஆண்டில் இயந்திர நிறுவனம் அமைக்க விண்ணப்பம் ஏதும் வரவில்லை.

### கட்டிட அனுமதி விண்ணப்பங்கள்

இந்நகராட்சியில் கட்டிட அனுமதிக்கு கொடுக்கப்பட்ட விண்ணப்பங்கள் 01.04.2024–2024–ல் நிலுவை ஏதுமில்லை.அரசாணை நிலை எண்..18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.. 04.02.2019–ன்படி தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன்படி கட்டிட அனுமதிக்கான விண்ணப்பங்கள் அனைத்தும் இணையதளம் **(ONLINE)** மூலம் பதிவேற்றம் செய்து மேற்கண்ட விண்ணப்பங்கள், நகரமைப்பு பிரிவில் பரிசீலனை செய்து உரிய அனுமதி இணையதளம் **(ONLINE)** மூலம் வழங்கப்படுகிறது. அரசாணை நிலை எண்..154, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள்.. 13.10.2020ன் அதிகார பகிர்வின்படி உள்ளாட்சிகளுக்கு திட்ட அனுமதி வழங்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 10000 சதுர அடி தரை பரப்பு வரை, 8 குடியிருப்புகள் வரை கொண்ட 12 மீட்டர் உயரத்திற்கு மிகாது தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்கள் அல்லது வாகன நிறுத்தும் தளம் மற்றும் மூன்று தளங்கள் கட்டிட அனுமதி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் வணிக உபயோக கட்டிடங்களை பொறுத்தமட்டில் 2000 சதுர அடி தரைத்தளம் மற்றும் முதல் தளம் தனித்த கட்டுமானத்திற்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.

மேற்படி தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன் விதி 14–ல் கட்டிட அனுமதிகாலம் 5 ஆண்டுகள் மற்றும் ஒருமுறை கால நீடிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால், கட்டிட அனுமதி கட்டணத்தை 5 ஆண்டுகளுக்கு வழங்குவதற்கு ஏற்பவும், கால நீடிப்பு காலத்தை 3 ஆண்டுகளுக்கு வழங்குவதற்கு ஏற்பவும், மன்ற ஒப்புதலுடன் மாற்றி அமைத்து விதிகளின்படி கட்டண வசூல்

செய்யப்படுகின்றது. உள்ளாட்சி அமைப்புகளில் 2500 சதுரஅடி பரப்பளவிற்கு மேற்படாத நிலத்தில் 1200 சதுர அடிபரப்பளவிற்கு கட்டப்படும் குடியிருப்பு கட்டிடங்கள் – கள ஆய்வு இன்றி எளிய முறையில் ஆவணங்களின் அடிப்படையில் இணையதளம் வாயிலாக கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

01.04.2024 முதல் 31.03.2025 முடிய கட்டிட அனுமதி கோரி 29 விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன. அவற்றில் 29 விண்ணப்பங்கள் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**I– குடியிருப்பு பகுதி**

இந்நகராட்சி புதிதாக தோற்றுவிக்கப்பட்ட நகராட்சியாக உள்ளதால் குடியிருப்பு பகுதியாக உள்ளஎல்லா பகுதியும் குடியிருப்பு உபயோகத்திற்கு மட்டுமே அனுமதிக்கப்படும். இப்பகுதியில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் தொழில் நுட்ப அனுமதி பெற்று ஹோட்டல்கள், பெரிய அளவிலான கட்டிடங்கள், பள்ளிகள், கிளப்புகள், பொது வழிபாட்டு கட்டிடங்கள், மனதளவில் பாதிக்கப்பட்டவர்களுக்கான தொழிற்பள்ளி அல்லது வங்கிகளின் குடியிருப்பு கிளைகள், பொழுதுபோக்கு அல்லது மனமகிழ் மன்றம் அல்லது மருத்துவமனைகள் அல்லது திரையரங்குகள் இவை போன்றவை கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்படும்.

**II–கடை மற்றும் வியாபார கட்டிடங்கள்**

1) அனைத்து கடைகள் மற்றும் வியாபார கட்டிடங்களும் அனுமதிக்கப்படும்

2) 50 குதிரை வேக திறனுக்குட்பட்ட மின்சார சக்தியால் இயக்கப்படும் இயந்திரங்களை நிறுவுவதற்கு மட்டும் சுகாதார அலுவலரின் ஒப்புதல் பெற்றபின் அனுமதி வழங்கப்படும். நீராவி, நீர் அல்லது காற்று, இயந்திர (அல்லது) மின்சார சக்தியால் இயக்கப்படும் தொழிற்சாலைகள் அல்லது பணிமனைகள் (Workshop) அனுமதிக்கப்பட மாட்டாது.

3) மற்ற இதர உபயோகங்களுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு மாவட்ட அலுவலகம், தஞ்சாவூர் அவர்களின் அனுமதி பெறாமல் ஒப்புதல் அளிக்கப்பட மாட்டாது.

4) கட்டிட அனுமதி வழங்குவதற்கு ஏதுவாக ஏற்கனவே பதிவு பெற்ற படவரைவாளர்கள் (Licensed Surveyer) உரிய தகுதியின் அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு உள்ளனர்.

**ஆக்கிரமிப்பு**

நகரத்தில் உள்ள சாலையோர தற்காலிக ஆக்கிரமிப்புகள் மற்றும் கட்டுமான இடி பொருட்கள் அகற்றும் பணி நெடுஞ்சாலை துறை, காவல்துறையுடன் ஒன்றிணைந்து அவ்வப்போது நடைபெற்று வருகிறது.

<u>விளம்பர பலகை</u>

உயர் நீதிமன்ற ஆணையின்படி, நகரில் உள்ள விளம்பர போர்டுகள் வைக்க நீதிமன்ற தடை உத்திரவு உள்ளபடியால், விளம்பர போர்டு அனுமதி நகராட்சியால் வழங்கப்படுவதில்லை. மேலும் அனுமதியற்ற விளம்பர போர்டுகள் அவ்வப்போது காவல்துறையுடன் இணைந்து அகற்றப்பட்டு வருகிறது.

<u>பூங்கா விளையாடுமிடம் மற்றும் திறவிடங்கள் விபரம்</u>

அதிராம்பட்டினம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பூங்கா ஏதும் இல்லை. மேற்படி பூங்கா இடத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் இது தொடர்பான வழக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நடந்து வருகிறது.மேற்படி ஆக்கிரமிப்பை அகற்ற துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<u>மழைநீர் சேகரிப்புதிட்டம் (**Rain water Harvesting**)</u>

அதிராம்பட்டினம் நகராட்சி பகுதிகளில் போதிய காலியிடம் உள்ள அரசு மற்றும் தனியாருக்கு சொந்தமான குடியிருப்புகள், வணிக கட்டிடங்கள், கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் தொழிற்சாலை கட்டிடங்கள் முதலியவற்றில் மழைநீர் அமைப்பு திட்டம் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசாணை எண்.ஆள சூடி.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MA-1) நாள்..11.10.2002–ன்படி அரசு மற்றும் தனியார் கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மழைநீர் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டிடங்களில், பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், மழைநீர் சேகரிப்புக்கான கட்டமைப்புகள் அமைத்திட மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களை கொண்டு விழிப்புணர்வு பேரணிகள், பள்ளி கல்லூரி மாணவர்களுக்கிடையே கட்டுரை போட்டிகள், பேச்சு போட்டிகள் மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்த கலை நிகழ்ச்சிகள் நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பத்திரிக்கை, திரையரங்குகள் மற்றும் உள்ளூர் தொலைக்காட்சியின் மூலமாக மழைநீர் சேமிப்பு கட்டமைப்பின் அவசியம் குறித்து விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. நகராட்சி பணியாளர்கள் மற்றும் அலுவலர்களை கொண்டு குழுக்கள் அமைக்கப்பட்டு வீடு வீடாக சென்று மழைநீர் கட்டமைப்புகளை ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து விளக்கப்பட்டு வருகிறது. மேலும் நகரில் முக்கிய இடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பின் அவசியம் குறித்து பிளக்ஸ் போர்டுகள் நிறுவப்பட்டுள்ளது. நகரில் விழிப்புணர்வு குறித்து துண்டு பிரசுரங்கள் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. நகராட்சி பராமரிப்பில் உள்ள 14 நீர் நிலைகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அரசு கட்டிடங்கள் மற்றும் நகராட்சி கட்டிடங்களில் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை சீர்செய்யவும் பராமரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>சாலையோர வியாபாரிகள் (Street Vendors)</u>**

அதிராம்பட்டினம் நகராட்சியில் தெருவோர வியாபாரிகள் விபர திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டதன் பேரில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) திட்டத்தின் கீழ் 258 தெருவோர வியாபாரிகளுக்கு சர்வே செய்யப்பட்டு பயோமெட்ரிக் அடையாள அட்டை மற்றும் விற்பனை சான்று வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பாரதப் பிரதமரின் PM SVANidhi–யின் கீழ் சாலையோர வியாபாரிகள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் 380 நபர்களுக்கு கடன் உதவி வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.

அதில் 150 விண்ணப்பங்கள் பெறப்பட்டு மேற்கண்ட விண்ணப்பங்கள் வங்கிகள் மூலம் ரூ.10,000/– கடனுதவி பெறுவதற்கு அனுப்பப்பட்டு, 110 நபர்களுக்கு வங்கிகள் மூலம் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் பொருட்டு புதிய 25 வண்டிகள் பெறுவதற்கு ஏதுவாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

# அதிராம்பட்டினம் நகராட்சி

## நிர்வாக அறிக்கை 2024–2025

## 9

# மின்னணு மேலாண்மை

# IX- மின்னணு மேலாண்மை

இந்நகராட்சி கணினி பிரிவில் உதவி கணினி திட்ட அமைப்பாளர் திரு.ஆர்.எட்வின் ஆரோக்கியராஜ்(பொ)அவர்கள், அறிக்கையாண்டில் பணிபுரிந்து வந்துள்ளார். தமிழக அரசின் காகிதமில்லா (Paperless) நடைமுறை நிர்வாகத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும்பொருட்டு இந்நகராட்சியில் அனைத்து நடவடிக்கைகளும் கணினிமயமாக்கப்பட்டுள்ளது.

**கணினி வசூல் மையங்கள்**

பொது மக்களின் சேவைக்காக நகராட்சி அலுவலகத்தில் வசூல் மையம் அமைக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. இணையதளம் மூலமும் வரிவசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**பிறப்பு இறப்பு சான்று வழங்கும் மையங்கள்**

பொது மக்களின் நலன் கருதி இந்நகராட்சி அலுவலகம் மற்றும் அரசு மருத்துவமனையிலும் பிறப்பு இறப்பு மையங்கள் அமைக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது.

**இணையதளம்**

நகராட்சியில் நடைபெறும் திட்டப்பணிகள் முன்னேற்றம் நகராட்சி பற்றிய புள்ளி விபரங்கள், நகர்மன்ற கூட்ட நடவடிக்கை குறிப்புகள், வரவு செலவு திட்ட அறிக்கை, நிர்வாக அறிக்கை, தணிக்கை அறிக்கை மற்றும் இதர நடவடிக்கைகள் உடனுக்குடன் பதிவு செய்யப்படுகிறது. நகராட்சி பணியாளர்களுக்கு உள்ளரங்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சி பணியாளர்களுக்கு மேலாளர் அவர்களால் தகவல் அறியும் உரிமச்சட்டம் குறித்த பயிற்சியும், கணினி அலுவலக இணையதளம் தொடர்பான மின்னஞ்சல் தொடர்பான பயிற்சி உதவி திட்ட அமைப்பாளர் மற்றும் புள்ளி விபர குறிப்பாளர் அவர்களால் அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சி அளிக்கப்பட்டுள்ள விபரம் பின்வருமாறு.

- Right to Information Act
- Email sending/receiving
- Scheme updation
- Online E-Tender, On line citizen services
- Taking Demand Notice and Hand book
- Financial Accounting System
- Taking Demand Register, DCB, Daily collection, Defaulter list (Top 25, Top 50, Top 100) Single Window.
- Family Enumeration Module
- IHSDP/SJSRY- Step-up, Online monitoring, SBMÏ IHHL Photos Uploading and online invoice bill passing
- GDP and CM cell petition reply through on line
- Engineering Section Online updation
- Grievance module (Tracking the grievances from the public.

# முடிவுரை

அதிராம்பட்டினம் நகரில் வெகு அருகாமையில் அமைந்துள்ள கலைக் கல்லூரிகள், பள்ளிக்கூடம், மற்றும் இதர தொழில்கள் மேம்பட்டு விளங்¦குவதால் இந்நகரம் மேலும் சிறப்புற்று பொருளாதார துறையிலும், நகர அபிவிருத்தி திட்டங்¦களிலும் உயர்நிலை பெற¦றுவருகிறது.

இந்நகர்மன¦றம் மக்களுக்காக பணியிலும் மன்றத்தின் தீர்மானங்¦களை ஏற்று செயலாற்றும் திறனிலும் பொது மக்கள் பல நலன¦களை பெற்று நகரமும் திருப்தியடைந்த முன¦னேற்ற நிலை காணப்படுகிறது. பொது மக்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளையும் பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் மக்களுக்கு வேண்டிய முக்கியமான வசதிகளை நிதிநிலைக்கேற்ப உடனுக்குடன் நிறைவேற்¦றப்பட்டு வருகிறது.

நகர்மன்றத்தின் ஆக்கப் பணிகளுக்கு பெரிதும் ஒத்துழைப்பு நல்கிய பொறியாளர், உதவி பொறியாளர், நகரமைப்பு ஆய்வாளர், மேலாளர்,கணக்கர், வருவாய் ஆய்வர், துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் தன்னலம் பாராது பிறர் நலம் காத்திட பணிபுரியும் துப்புரவு தொழிலாளர்கள் மற்று அனைத்து பணியாளர்களின¦ ஒத்துழைப்பால் நகராட்சி சட்டத்திற¦கு உட்பட்டு நிர்வாக பொறுப்புகளையும், கடமைகளையும் திருப்திகரமாக நிறைவேற்றி வைக்கப்பட்டது குறித்து எனது மனமார்ந்த நன¦றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிராம்பட்டினம் நகருக்கு சிறப்பான நிதி ஒதுக்கீடு செய்த தஞ்சை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர், பட்டுக்கோட்டை சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதிராம்பட்டினம் நகர் வளர்ச்சி பணிகளுக்கும், முன்னேற்றத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்து உதவியதற்கு சட்டமன்¦ற உறுப்பினர் அவர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

இடம் :அதிராம்பட்டினம்
நாள் : 29. 05. 2025.

ஆணையர் (மு. கூ. பொ)
அதிராம்பட்டினம் நகராட்சி

<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை</u>

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு. ஜி. கனிராஜ் BA.,BL.,<br>ஆணையாளர் (கூ. பொ),<br>அதிராம்பட்டினம் நகராட்சி. | நகராட்சி நிர்வாக இயக்குநர்,<br>நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம்,<br>ராஜா அண்ணாமலைபுரம்,<br>75, சாந்தோம் நெடுஞ்சாலை,<br>எம். ஆர். சி. நகர்,<br>சென்னை – 28. |
| | வழி.. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர். |

<u>ந.க.எண். 132 /2025 /சி1, நாள். 29. 05. 2025.</u>

அய்யா,

பொருள் நிர்வாக அறிக்கை – அதிராம்பட்டினம் நகராட்சி – 2024–2025ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை அனுப்புதல் – தொடர்பாக.

****

அதிராம்பட்டினம் நகராட்சியில் 2024–2025–ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை இரு பிரதிகள் இணைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்து கொள்கின்றேன்.

இணைப்பு:.2024–2025–ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை 2 பிரதிகள்

ஆணையர் (மு. கூ. பொ)
அதிராம்பட்டினம் நகராட்சி